இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடித்து பொல்லூஷன் ஏற்படாத வகையிலே அந்த கழிவு நீரை வெளியிலே அனுப்ப வேண்டும் என்று நடவடிக்கை எடுப்பதுதான். ஆனால் சில இடங்களிலே இப்படி செய்தாலும் கொஞ்சம் துர் நாற்றம் வரும். எனவே அதையும் தடுத்துவிட முடியும் என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்தத் தண்ணீரை பொறுத்த வரையில் கண்ட இடத்திலே விட்டு பிரச்சினையாக இருக்குமே யானால் சம்பந்தப்பட்டத் துறைக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாகவே சொல்லி நடவடிக்கை மேற்கொள்ள லாம். எனவே சொல்லி இருக்கின்ற காரணத்தினால் இத்துர் நாற்றத்தினால் வேறு ஏதாவது நோய் வருமா என்ன என்பதைப் பற்றி அவர்கள் இடத்திலேயே பார்த்துச் சொல்லலாம். அந்த கழிவு நீர் ஒழுங்காக வருகிறதா, நாம் நிர்ணயித்திருக்கின்ற அளவிலே அது சுத்தப்படுத்தப்பட்டு வருகிறதா, என்பதைப் பற்றி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திலே சொல்லி அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டை செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 307, திரு. வே. பெரியசாமி, உறுப்பினர் இருக்கையில் இல்லை.

வினா எண் 308, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

308—

கல்வி நிறுவனங்களுக்கு சலுகை விலையில் அளிக்கப்படும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பழையப் பேருந்துகள்.

*10884—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பழைய பேருந்துகள் எந்த விதியின் அடிப்படையில் கல்வி நிறுவனங் களுக்கு சலுகை விலையில் அளிக்கப்படுகின்றன?

(ஆ) 1989 முதல் 1991 ஜனவரி முடிய விதிகள் மீறப்பட்டு சலுகை விலையில் வழங்கப்பட்ட பேருந்துகளின் விவரம் என்ன?

1993 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பழைய பேருந்துகள் அவ்வப்போது அரசு நிர்ணயம் செய்யும் விலைப் பட்டியல்படி, நிர்வாகக்குழு ஒப்புதலின் பேரில் கல்வி நிறுவனங் களுக்கு வழங்கப்படுகின்றது.

(ஆ) குறிப்பிட்ட காலத்தில் விதிகள் மீறப்பட்டு சலுகை விலையில் பேருந்துகள் ஏதும் இப்போக்குவரத்துக் கழகத்தால் எந்தக் கல்வி நிறுவனத்திற்கும் வழங்கப்படவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கல்வி நிறுவனங்களுக்கு இன்னின்ன தகுதி இருந்தால்தான் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பழைய பேருந்துகளை அந்த சலுகை அடிப்படையில் தர முடியும் என்று ஏதாவது வழிமுறைகள், நார்ம்ஸ் அரசு விதித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதே நேரத்தில் சென்ற ஆண்டு 1992-93-ல் சென்னையில் மட்டும் எத்தனைப் பேருந்துகளை இதுபோன்ற கல்வி நிறுவனங்களுக்கு கொடுத்துள்ளார் என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேர வைத்தலைவர் அவர்களே, விதிமுறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அரசு கல்வி நிறுவனங்களுக்கு 1989-90ல் ரூ. 60 ஆயிரம், 1990-91-ல், ரூ. 70 ஆயிரம். 1991-92-ல் ரூ. 80 ஆயிரம், 1992-93-ல் ரூ. 1 லட்சம் விலையில் இன்றைக்கு விற்றுக் கொண்டு இருககிறோம்.

அரசு அங்கீகரிக்கப்பட்ட அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு, 1989-90-ல் ரூ. 65 ஆயிரம், 1990-91-ல் ரூ. 75 ஆயிரம், 1991-92-ல் ரூ. 85 ஆயிரம், இப்போது ரூ. 1 லட்சத்து 5 ஆயிரம்.

அரசு அங்கீகரிக்கப்படாத கல்வி நிறுவனங்களுக்கு 1989-90-ல் ரூ. 70 ஆயிரம், 1990-91-ல் ரூ. 85 ஆயிரம், 1991 92-ல் ரூ. 95 ஆயிரம், இப்போது ரூ. 1 லட்சத்து 15 ஆயிரம்,

சுயநிதி கல்வி நிறுவனங்களுக்காக 1989-90-ல் ரூ. 75 ஆயிரம், 1990-91-ல் ரூ. 90 ஆயிரம், 1991-92-ல் ஒரு லட்சம், இப்பொழுது ஒரு லட்சத்து 20 ஆயிரம். ஆகவே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் 1991-92-ல் எந்தப் பேருந்துகளும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படவில்லை.

முற்பகல் 10-25

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் போன்றே தமிழகத்தில் இருக்கின்ற, பிற மாவட்டத்தில் இருக்கின்ற, இதுபோன்ற அரசு போக்குவரத்துக் கழகங்களால் அந்த பகுதியில் இருக்கின்ற நல்ல கல்வி நிறுவனத்திற்கு இதுபோன்ற சலுகை அடிப்படையில் பேருந்துகள் வழங்கப்பட்டு வருகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதிமுறைகள் எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 309, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

309—

மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தில் பேரை குடிதண்ணீர் திட்டம்.

*9825— திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தில் பேரை குடிதண்ணீர்த் திட்டம் செயல்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வூரிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு குடிநீர் வழங்க உடனடியாக அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இக்கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு பேரை குடிநீர்த்திட்டம் முடிவடைந்தவுடன் குடிநீர் வழங்கப்படும்.